# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


## முன்னிலை : திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்

## மேல்முறையீட்டு மனு எண் 35 /2017

திரு. ரா. முத்துராமலிங்கம்,
த/பெ ராமையா,
கொட்டகுடி,
மேலூர் தாலுகா,
மதுரை மாவட்டம் – 625 106. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. ஆர். முத்துராமலிங்கம்)

எதிர்

செயற் பொறியாளர்/இ&ப ,
கிழக்கு/மதுரை,
மதுரை மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
புது நத்தம் ரோடு,
திருப்பாலை – 14. . . . எதிர்மனுதாரர்
(திரு. S.குமார், உதவி செயற் பொறியாளர்/தெற்கு/மேலூர்(பொறுப்பு
மற்றும்
திரு. திரவியசேகர், உதவி பொறியாளர்/கிராமியம்/தெற்கு/மேலூர்)

## கேட்புரை நாள் : 11–7–2017

## ஆணை நாள் : 4.8.2017

திரு. ரா. முத்துராமலிங்கம்,, த/பெ ராமையா, கொட்டக்குடி, மேலூர் மதுரை அவர்களின் 24.4.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.35/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 11.7.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்

மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :

மேல்முறையீட்டாளருக்கும் திரு. சுப்பிரமணியன் என்பவருக்கும் 2/22A (சரியான எண்.5/22A)என்ற எண்ணில் உள்ள வீடு மற்றும் 5/22 (சரியான எண்.5/32) என்ற எண்ணில் உள்ள ரைஸ் மில் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் திரு. சுப்பிரமணியன் என்பவருக்கு கடந்த 20.7.2016 அன்று உதவி செயற்பொறியாளர்/தெற்கு/மேலூர் அவர்கள் போலியான ரசீதுகளின் அடிப்படையில் மின்இணைப்பு வழங்கியுள்ளார் . அதனால் அவரின் வழக்கு பாதிக்கப்படும் என்பதால் அந்த மின்இணைப்பை ரத்து செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

### 2. வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் திரு. முத்துராமலிங்கம் அவர்கள் கதவு எண்.2/22 Aயில் உள்ள வீடு மற்றும் கதவு எண்.5/32ல் உள்ள ரைஸ் மில் சம்பந்தமாக மேலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாம் தாக்கல் செய்துள்ள வழக்கு எண்.OS 328/2011 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்கண்ட கதவு எண்களில் திரு. சுப்பிரமணியன் அவர்களுக்கு புதிய மின்இணைப்பு வழங்க கூடாது என்று உதவி மின்பொறியாளர்/தெற்கு/மேலூர் அவர்களிடம் 27.2.2016 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்.

2.2 உதவி பொறியாளர்/ஊரகம்/தெற்கு மேலூர் அவர்கள் கதவு எண்.5/22Aல் உள்ள வீடு அவருக்கு சொந்தம் என்பதற்கு உரிய வருவாய் துறை சான்றிதழ்களை சமர்ப்பிக்க கோரியுள்ளார். ஆனால், அந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

2.3 இதற்கிடையில் திரு. சுப்பிரமணியன் அவர்கள் கதவு எண்.5/23 (பழைய எண்.5/22A) உள்ள வீட்டிற்கு அவரது பெயரில் மின்இணைப்பு வழங்க 10.5.2016ல் பஞ்சாயத்து வழங்கிய வீட்டுவரி ரசீது மற்றும் ஏனைய ஆவணங்களுடன் விண்ணப்பம் அளித்துள்ளார். அதற்கு உரிமம்தாரரின் சட்ட குழுமத்திடம் கருத்துரு பெற்று மின்இணைப்பு எண்.116–010–1289 திரு சுப்பிரமணியன் பெயரில் 20.7.2016 அன்று வழங்கப்பட்டுள்ளது.

2.4 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மின்இணைப்பு போலியான ரசீது களின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அதனால் அவரின் வழக்கு பாதிக்கப்படும் என்பதால் அந்த மின்இணைப்பை ரத்து செய்ய வேண்டும் என்று மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.5 மன்றம் தன்னுடைய தீர்வை 2.3.2017 நாளிட்ட ஆணையில் வழங்கியுள்ளது. மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

## 3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 2–3–2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் தீர்வு</u>*

*எதிர்மனுதாரர் அவர்களால் மன்றம் கேட்புரையில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையில் முறையீட்டாளர் அவர்களிடமிருந்து மன்றத்தில் பெறப்பட்ட மனுவில் முறையீட்டாளருக்கும் திரு. .சுப்பரமணியன் என்பவருக்கும் வீடு மற்றும் ரைஸ்மில் சம்மந்தமாக நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ள போது திரு. சுப்பிரமணியன் என்பவருக்கு 5/23 (பழைய எண்.5/22A) என்ற எண்ணில் உள்ள வீட்டிற்கு மின்இணைப்பு வழங்கியதற்கு ஆட்சேபனை தெரிவித்து இருந்தார். அதன்படி முறையீட்டாளருக்கு வருவாய் துறை*

*ஆவணங்கள் சமர்ப்பிக்க கால அவகாசம் கொடுக்கப்பட்டு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததாலும் மேலும் திரு. சுப்பிரமணியன் அவர்கள் அளித்த ஆவணங்களின் அடிப்படையில் மின்சார வாரிய சட்டகுழுமத்தால் பெறப்பட்ட சட்டகருத்துரையின் அடிப்படையில் திரு. சுப்பிரமணியன் கொட்டக்குடி அவர்களுக்கு விண்ணப்பத்துடன் ரூ.80/– மதிப்பிலான பத்திரத்தில் Indemnity Bond மற்றும் இருமடங்கு security deposit பெறப்பட்டு திரு. சுப்பிரமணியன் என்பவருக்கு மின்இணைப்பு (எண்.116–010–1289) 20.7.2016 அன்று மின்இணைப்பு வழங்கப்பட்டது. எனவே, தமிழ்நாடு மின்சார வாரிய ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி திரு. சுப்பிரமணியன் கொட்டக்குடி என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ள (மின்னிணைப்பு எண்.116–010–1289) வீட்டு மின்னிணைப்பை ரத்து செய்ய இயலாது. மேலும், விண்ணப்பத்துடன் Indemnity Bond பெறப்பட்டுள்ளதால் நீதிமன்ற வழக்கு எந்தவிதத்திலும் பாதிப்படைய வாய்ப்பில்லை என்று எதிர்மனுதாரர் தெரிவித்ததை மன்றமும் ஏற்றுக்கொண்டு திரு. சுப்பிரமணியன் என்பவருக்கு கொடுக்கப்பட்ட மின்இணைப்பை துண்டிக்க இயலாது என்று மன்றம் ஆணையிடுகிறது. மேற்கண்ட தீர்வுடன் இம்முறையீட்டு மனு எண்.25/2016 முடிவுக்கு கொண்டுவரப்படுகிறது. செலவு தொகை இல்லை.''*

**4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>**

**4.1** முறையீட்டாளர் திரு. முத்துராமலிங்கம் த/பெ ராமையா, கொட்டகுடி அவர்கள் கதவு எண்.5/22A உள்ள வீடு மற்றும் ரைஸ்மில் சம்பந்தமாக மேலூர் உரிமையியல் நீதின்றத்தில் தாம் தாக்கல் செய்துள்ள வழக்கு OS 328/2011 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்கண்ட கதவு எண்களில் திரு. சுப்பிரமணியன் த/பெ ராமையா கொட்டக்குடி அவர்கள் பெயரில் புதிய மின்இணைப்பு ஏதும் வழங்க ஆட்சேபனை தெரிவித்து உதவி மின்பொறியாளர்/ தெற்கு/ மேலூர் அவர்களுக்கு கடந்த 27.2.2016 அன்று கடிதம் அளித்துள்ளார்.

**4.2** அதன்பேரில் உதவி மின்பொறியாளர்/ஊரகம்/தெற்கு/மேலூர் அவர்கள் கதவு எண்.5/22Aல் உள்ள வீடு தங்களுக்கு சொந்தமாயின் உரிய வருவாய்த்துறை சான்றிதழ்களை ஒரு வார

காலத்திற்குள் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி 18.3.2016 அன்று திரு.முத்துராமலிங்கம் த/பெ ராமையா கொட்டகுடி அவர்களுக்கு கடிதம் அளித்துள்ளார்.

4.3 அதற்கு திரு. முத்துராமலிங்கம் த/பெ ராமையா, கொட்டக்குடி அவர்கள் உரிய வருவாய்த்துறை ஆவணங்கள் பெறுவதற்கு காலதாமதம் ஏற்படுவதால் மேலும் ஒரு வார காலம் அவகாசம் வழங்குமாறு 29.3.2016 அன்று உதவி மின்பொறியாளர்/ஊரகம்/தெற்கு/ மேலூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அதன் பிறகு இதுநாள்வரை இது சம்மந்தமான வருவாய்த்துறை ஆவணங்களோ கடிதமோ திரு. முத்துராமலிங்கம் த/பெ ராமையா, கொட்டகுடி அவர்களால் வழங்கப்படவில்லை.

4.4 இதற்கிடையில் திரு. சுப்பிரமணியன், கொட்டகுடி என்பவர் மேற்கண்ட சொத்து சம்மந்தமாக மேலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாம் தாக்கல் செய்துள்ள வழக்கு OS 322/2011 என்ற வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் கதவு எண்.5/23 (பழைய எண்.5/22A)ல் உள்ள வீட்டிற்கு தனது பெயரில் புதிய மின்னிணைப்பு வழங்க வேண்டிய 10.5.2016 அன்று கீழ்கண்ட வருவாய்துறை ஆவணங்களுடன் விண்ணப்பம் அளித்துள்ளார்.

1. கொட்டகுடி பஞ்சாயத்து மூலம் வழங்கப்பட்ட கதவு எண்.5/23 உள்ள வீட்டுவரி ரசீது
2. கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று நாள் 22.2.2016
3. கிராம நிர்வாக அலுவலர் நான்கு மாலுடன் வழங்கிய சான்று நாள் 30.2.2016
4. ஆதார் அடையாள அட்டை நகல்
5. Copy of judgment in OS 118 of 1977
6. Copy of Advocate commissioners Report filed on OS No.118/1999.
7. Copy of order in E.P. No.230/1990 in OS No.118/1977.
8. Copy of order in IA No.332 of 1988 in OS No.478 of 1986.
9. Copy of the order in SLP No.16118 of 1990 dt.4.3.1992
10. Copy of the order in IA No.1023 of 2011 in O.S. No.322/2011
11. Copy of the order in IA No.678 of 2012 OS No.322 /2011.
12. Copy of the order in CRLOP (MD) No.19840/15.

4.5 அதன்பேரில் கொட்டகுடி கிராமம் கதவு எண்.5/23 (பழைய எண்.5/22ஏ) உள்ள வீடு சம்மந்தமாக இருவேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதால் இவ்விண்ணபத்தின் பேரில் மேற்கண்ட வீட்டிற்கு புதிய வீட்டு மின்னிணைப்பு வழங்கலாமா என்பது குறித்து தமிழ்நாடு மின்சார வாரிய சட்டக்குழுமத்திடம் மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து உதவி மின்பொறியாளர்/ஊரகம்/தெற்கு/மேலூர் அவர்களால் சட்டக்கருத்துரை 27.6.2016 அன்று கேட்கப்பட்டதற்கு தமிழ்நாடு மின்சார வாரிய சட்டகுழுமத்தால் 1.7.2016 அன்று வழங்கப்பட்ட சட்டக்கருத்துருவில் Under the circumstances, I am of the opinion that the application shall be processed and electricity connection shall be granted. Section43 of Electricity Act, 2003 envisages to granting connection on request. Therefore, a statutory duty is cast on the TANGEDCO to provide connection if other conditions are satisfied. Regulation 27(4) of the Tamil Nadu Electricity Distribution Code stipulates that if there is any objection/impediment then the TANGEDCO shall grant electricity connection after obtaining indemnity bond and on payment of twice the normal rate as security deposit. Since there is objection, it is directed to grant electricity connection as per Regulation 27(4) of the TNE Distribution Code by obtaining imdenityy bond and on payment of twice the normal rate as security deposit advised accordingly. இதன் அடிப்படையில் திரு. சுப்பிரமணியன் கொட்டகுடி என்பவரிடம் விண்ணபத்துடன் ரூ.80/– மதிப்புள்ள பத்திரத்தில் Indemnity Bond பெறப்பட்டு இருமடங்கு Security Depsit உடன் விண்ணப்பம் 13.7.2016 அன்று பதிவு செய்யப்பட்டு திரு. சுப்பிரமணியன் கொட்டக்குடி என்பவர் பெயரில் புதிய மின்னிணைப்பு எண்.116–010–1289 நாள் 20.7.2016 அன்று வழங்கப்பட்டுள்ளது.

4.6 அதனை தொடர்ந்து திரு. முத்துராமலிங்கம் த/பெ ராமையா கொட்டகுடி அவர்கள் மதுரை மின்நுகர்வோர் குறைதீர் மன்றம்/மதுரை அவர்களிடம் முறையீட்டாளர் திரு. முத்துராமலிங்கம்

அவர்களுக்கும் திரு. சுப்பிரமணியன் என்பவருக்கும் 5/22ஏ என்ற எண்ணில் உள்ள வீடு மற்றும் 5/22 என்ற எண்ணில் உள்ள ரைஸ்மில் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் சுப்பிரமணியன் என்பவருக்கு கடந்த 20.7.2016 அன்று உதவி செயற்பொறியாளர்/தெற்கு/மேலூர் அவர்கள் போலியான ரசீதுகளின் அடிப்படையில் மின்இணைப்பு கொடுத்துள்ளதாகவும் இதனால் தனது வழக்கு பாதிக்கப்படும் என்பதால் உடனடியாக மின்இணைப்பை ரத்து செய்ய வேண்டும் என தெரிவித்து அளித்துள்ள முறையீட்டு மனு பதிவு எண்.25/16ன் படி பதிவு செய்யப்பட்டது.

4.7 மன்றத்தால் இரு தரப்பினரிடமும் நடத்தப்பட்ட கேட்புரையில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார வாரிய சட்டக்குழுமத்தால் வழங்கப்பட்ட சட்டக்கருத்துருவின் அடிப்படையில் திரு. சுப்பிரமணியன் கொட்டகுடி என்பவரிடம் விண்ணப்பத்துடன் ரூ.80/– மதிப்பிலான பத்திரத்தில் Indemnityy Bond இருமடங்கு securitii Deposit பெறப்பட்டு மின்னிணைப்பு எண்.116–010–1289 நாள் 20.7.2016 அன்று வழங்கப்பட்டது. எனவே, தமிழ்நாடு மின்சார வாரிய ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி திரு. சுப்பிரமணியன் கொட்டக்குடி என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ள மின்னிணைப்பு எண்.116–010–1289 வீட்டு மின்னிணைப்பை ரத்து செய்ய இயலாது. மேலும், விண்ணபத்துடன் Indemnity Bond பெறப்பட்டு உள்ளதால் நீதிமன்ற வழக்கு எந்தவிதத்திலும் பாதிப்படைய வாய்ப்பில்லை என்பதனை மன்றம் ஏற்றுக்கொண்டு திரு. சுப்பிரணியன் கொட்டகுடி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள மின்இணைப்பை துண்டிக்க இயலாது என 2.3.2017 அன்று மன்றத்தால் தீர்வு வழங்கப்பட்டது.

4.8 தமிழ்நாடு மின்வாரிய சட்டக்குழுமத்தால் 1.7.2016 அன்று வழங்கப்பட்ட சட்டக்கருத்துருவின் அடிப்படையிலும் Regulation 27(4) of the TNE Distributon Code ன்படி திரு. சுப்பிரமணியன் கொட்டகுடி என்பவரிடம் விண்ணபத்துடன் ரூ.80/– மதிப்புள்ள பத்திரத்தில்

Indemnity Bond இருமடங்கு security deposit பெறப்பட்டு மின்னிணைப்பு வழங்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு மின்சார வாரிய ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி எந்த ஒரு மின்இணைப்பையும் கீழ்கண்ட காரணங்களுக்கு மட்டுமே மின்துண்டிப்பு செய்ய இயலும். நீதிமன்ற உத்தரவு, மின்திருட்டு நடைபெற்றால் மின்கட்டணம் செலுத்தாத மின்னிணைப்பு, ஆக்கிரமிப்புகள் அரசினால் அகற்றப்படும்போது மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுவாரிய உத்தரவு இவற்றில் எந்த ஒரு காரணமும் இல்லாதபட்சத்தில் திரு. சுப்பிரணியன், கொட்டகுடி என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ள மின்னிணைப்பு எண்.116–010–1289 வீட்டு மின்னிணைப்பை ரத்து செய்ய இயலாது என்பதையும் இதுகுறித்து மேற்கண்ட வழக்குகளில் நீதிமன்றத்தால் வழங்கப்படும் நீதிமன்ற உத்தரவின்படியே மேல்நடவடிக்கை எடுக்க இயலும் என்பதுடன் விண்ணப்பத்துடன் Indemnity Bondம் பெறப்பட்டு உள்ளதால் இது சம்பந்தமான நீதிமன்ற வழக்கு எந்தவிதத்திலும் பாதிப்படைய வாய்ப்பில்லை என்பதனையும் மேதகு தமிழ்நாடு மின்குறைதீர்ப்பாளர் சமூகம் அவர்களின் மேலான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>**

**5.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 11.7.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

**5.2** மேல்முறையீட்டாள திரு. முத்துராமலிங்கம் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்

**5.3** எதிர்மனுதாரர் சார்பில் திரு. S. குமார், உதவி செயற்பொறியாளர்/தெற்கு/மேலூர்(பொறுப்பு) மற்றும் திரு. திரவியசேகர், உதவி பொறியாளர்/கிராமியம்/தெற்கு/மேலூர் ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

## 6. கேட்புரை நாளில் மேல்முறையீட்டாளர் எடுத்துரைத்த வாதங்கள்

6.1 மேல்முறையீட்டாளர் 5/22ஏ என்ற எண்ணில் அமைந்துள்ள வீடு மற்றும் 5/32 எண்ணில் உள்ள ரைஸ்மில் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள பொழுது அது பற்றி அவரின் ஆட்சேபனையை தெரிவித்ததும் மின்இணைப்பு திரு. சுப்பிரமணியன் என்பவர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அந்த மின்இணைப்பை ரத்து செய்ய வேண்டும் என்று கோரினார்.

6.2 மேற்கண்ட இடத்தின் உரிமை சம்பந்தமாக பல ஆண்டுகளாக வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் தற்பொழுது உள்ள மின்வாரிய அலுவலர்களால் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அது தவறு என்று வாதிட்டார்.

6.3 மேலும், மேற்கண்ட வீட்டிற்கு திரு. சுப்பிரமணியன் பெயரில் வரி வசூலித்து ரசீது வழங்கிய கொட்டகுடி ஊராட்சி மன்ற தலைவர் அவர்கள் அந்த சொத்தில் பிரச்சனை உள்ளது, எனவே, மின்இணைப்பை வழங்க வேண்டாம் என்று உதவி பொறியாளர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதையும் மீறி மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மின்இணைப்பு ரத்து செய்யப்படவேண்டும் என்று வாதிட்டார். மேலும், தலைவர், கொட்டக்குடி ஊராட்சி அவர்களின் கடிதத்தின் நகலையும் அளித்துள்ளார்.

## 7. கேட்புரை நாளில் எதிர்மனுதாரரின் பிரதிநிதி கள் எடுத்துரைத்த வாதங்கள்

7.1 உதவி செயற்பொறியாளர்/தெற்கு/மேலூர் அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 உதவி பொறியாளர், மேல்முறையீட்டாளரிடம் சம்பந்தப்பட்ட வீட்டிற்கு அவரின் உரிமை சம்பந்தமான வருவாய் ஆவணங்கள் கோரப்பட்டன. ஆனால், அவர் அவ்வாறு ஆட்சேபனை செய்யும் இடத்திற்கு சொந்தக்காரர் என்பதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை.

7.3 திரு. சுப்பிரமணியன் அவர்கள் மேற்கண்ட வீட்டிற்கு வரிசெலுத்தியமைக்கான ரசீது கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ் மற்றும் நீதிமன்ற உத்தரவுகளின் நகல்களுடன் மின்இணைப்புகோரி மனு செய்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று தெரிவித்ததால் Standing Counsel (நிலை வழக்கறிஞர்) அவர்களிடம் சட்டக்கருத்துருவின்படி Indemnity Bond மற்றும் enhanced security deposit பெற்று மின்இணைப்பு வழங்கப்பட்டது என்று வாதிட்டார்.

7.3 மேலும், தலைவர், கொட்டக்குடி ஊராட்சி அவர்களின் கடிதத்தின் நகலும் Standing Counselக்கு அனுப்பப்பட்டு அதையும் ஆராய்ந்து தான் சட்டகருத்துரு நிலை வழக்கறிஞர் அவர்களால் வழங்கப்பட்டது என்றும் வாதிட்டார்.

7.4 மேலும், Indemnity Bond வாங்கியுள்ளதால் நீதிமன்ற உத்தரவிற்கு இணங்க மின்இணைப்பின் நிலை தீர்மானிக்கப்படும் என்றும் வாதிட்டார்.

7.5 மேலும், திரு. சுப்பிரமணியன் அந்த வீட்டில் குடியிருந்து மின்இணைப்பை உபயோகித்து வருகின்றார் என்றும் தெரிவித்தார்.

## 8. <u>மேல்முறையீட்டாளரின் எழுத்துப்பூர்வமான வாதுரையில் தெரிவித்துள்ள வாதங்கள்</u>

8.1 எங்களுக்கு சொந்தமான வீடு ரைஸ்மில் மற்றும் சொத்துக்கள் சம்பந்தமாக சுப்பிரணியன் என்பவர் O.S.118/77 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கில் எங்களுக்கு எங்கள் அம்மா பாதுகாவலராக இருந்த நிலையில் என். அண்ணன், தங்கை நான் ஆகிய மூவரும் மேஜர் ஆன நிலையில் எங்களை மைனர் என்றும், எங்களுக்கு எங்க அப்பா பாதுகாவலர் என்று கூறி 1988ல் சுப்பிரமணியனுக்கும் எங்கள் அப்பாவிற்கும் சரிபாகம் என்ற மோசடியான தீர்ப்பு பெற்றுள்ளார்.

8.2 இந்நிலையில் எங்களது மாமாவை பாதுகாவலராக வைத்து மைனரான எனது தம்பிகள் மூலமாக மேற்படி தீர்ப்பினை எதிர்த்து மதுரை முதலாவது சப் கோர்ட்டி ல் வழக்கு தொடர்ந்து OS 478/88ல் எண்ணில் வழக்கு நடைபெற்று கொண்டிருந்த நிலையில் 2004 ஆம் ஆண்டில் மேலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு (pecuniary Jurisdiction) காக அனுப்பிய வழக்கு கட்டில் குறைபாடு உள்ள காரணமாக திருப்பி மதுரை சப்கோர்ட்டிற்கு அனுப்பப்பட்ட நிலையில் வழக்கு கட்டு மேலூர்உரிமையியல் கோர்ட்டிற்கு வராமல் சுமார் 7 ஆண்டுகள் கேஸ் கட்டை கண்டு பிடிக்கமுடியவில்லை. அதன்பின்பு மதுரை மாவட்ட நீதிபதி அவர்களிடம் புகார் மனு அளிக்கப்பட்டு அம்மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு கேஸ் கட்டு மேலூர் உரிமையியல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு OS 328/2011 என்ற புதிய எண்ணில் வழக்கு நிலுவையில் உள்ளது.

8.3 இந்நிலையில் சுப்பிரமணி என்பவர் ரைஸ்மில் மற்றும் வீடு மற்றும் சில சொத்துக்கள் மீது மேலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து OS 322/2011 என்ற எண்ணில் வழக்கு நிலுவையில் உள்ளது.

8.4 இந்நிலையில் வீடு மற்றும் ரைஸ்மில் ஆரம்ப நிலையிலிருந்தும் இன்றுவரை எங்களது அப்பா பெயரில் பழைய எண்.5/22ஏ புதிய எண்.5/26 ரைஸ்மில் 5/32 கிராம பஞ்சாயத்து கணக்கில் உள்ளது. எங்களது வீடு கீழமேல் திசையில் உள்ளது. கிழக்கு பகுதி காரைவீட்டுடன் இணைந்த ஒட்டு வீடும் உள்ளது. இந்நிலையில் காரை வீட்டை இடித்து அதன் சுற்று சுவரையும் இடித்து பழுதடைந்த நிலையில் உள்ள ரைஸ் மில்லுக்கும் ஊராட்சி மன்றத்தலைவரை சுப்பிரமணி என்பவர் அணுகி கடந்த 2015–2016 5/23 ,5/89 என்ற போலியான எண்ணில் ரசீது பெற்றுள்ளார். இந்நிலையில் நான் ஊராட்சி மன்றத்தலைவரிடம் ஆட்சேபனை மனு செய்தேன். ஊராட்சி மன்றத்தலைவர் உடனடியாக ஒரு மறுப்பு கடிதத்தை உதவி செயற்பொறியாளர் மேலூர் ஊரகம், தெற்கு அவர்களுக்கு ஊராட்சி செயலர் மூலம் மின்இணைப்பு தருவதை நிறுத்தி வைக்க வேண்டி கொண்டார்.

8.5 மேற்படி சுப்பிரமணியன் 1988 முதல் 2015 ம் வருடம் வரை சுமார் 27 வருடங்கள் மின்இணைப்பு பெறாமல் தற்போது போலி ரசீதுகள் மூலமாக சட்ட விரோதமாக மின்இணைப்பு பெற்றுள்ளார்.

8.6 நாங்கள் தொடர்ந்த வழக்கில் சிவில் வழக்கு OS 328/2011 நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கில் உள்ள சொத்துக்கள் சம்பந்தமாக சுப்பிரமணியன் தொடர்ந்த சிவில் வழக்கு OS 322/2011ம் நிலுவையில் உள்ளது.

8.7 நான் 23.2.2016 அன்று உதவி செயற்பொறியாளர் மேலூர் ஊரகம், தெற்கு அவர்களுக்கு அனுப்பிய ஆட்சேபனை மனு மீது நடவடிக்கை ஏதும் எடுக்காமல் உதவி செயற்பொறியாளர் போர்மென், இவர்கள் சுப்பிரமணியன் மனு மீது தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் மற்றும் அவசரமாக மின்இணைப்பு வழங்கியதன் காரணத்தை துறை ரீதியாக விசாரணை செய்து இவ்விரு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து மேற்படியார்கள் வழங்கிய மின்இணைப்பை ரத்து செய்து எங்கள் சிவில் வழக்கு முடியும் வரை எங்களது உரிமைகளை பாதுகாத்து தருமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

## 9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது இந்த வழக்கில் கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாவாக உள்ளன.

(i) ஒரு புதிய தாழ்வழுத்த மின்இணைப்பை வழங்க உரிமம்தாரர் பின்பற்ற வேண்டிய விதிகள் என்ன ?

(ii) மேற்கண்ட மின்இணைப்பு மேற்கண்ட விதிகளுக்கு இணஙக உள்ளதா ?

(iii) ஒரு மின்இணைப்பு மின்துண்டிப்பு செய்ய விதிகளின்படி கூறப்பட்டுள்ள காரணங்கள் யாவை ?

(iv) மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளான மேற்கண்ட மின்இணைப்பை மின்துண்டிப்பு செய்ய வேண்டும் என்பது ஏற்புடையதா ?

**10. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>**

**10.1** ஒரு புதிய தாழ்வழுத்த மின்இணைப்பை வழங்க வேண்டும் என்றால் உரிமம்தாரர் பின்பற்ற வேண்டிய விதிகள் பற்றி தெரிந்து கொள்ள நாம் தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி **27(3)** மற்றும் **27(4)**ஐ ஆராய வேண்டும். அந்த விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*27. Requisitions for Supply of Energy:*
*xx xxx xxx xxxx*
*xxxx xxxx xxxxx*
*(3) The application for HT service connection shall be in FORM-4. Application for LT service connection (other than Agriculture and Hut), LT Agriculture service connection and LT Hut service connection shall be in FORM - 1,2 and 3 respectively.*

*Note : Requisitions for supply of energy ( Applications) , even if incomplete, and irrespective of whether they are handed over in person or by post, should be acknowledged in writing. If they are in order, they shall be registered immediately and acknowledged. If they are incomplete, the defects should be indicated and returned without registration*
*(4). An intending consumer who is not the owner of the premises shall produce a consent letter in Form 5 of Annexure III to this code from the owner of the premises for availing the supply. If the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce valid proof of his/her being in occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure III to this code indemnifying the licensee against any loss on account of disputes arising out of effecting service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate.*

*Explanation:- For the purpose of this sub-regulation, the expression "valid proof" means any proof of occupancy such as registered power of attorney or latest rent receipt issued prior to the date of application or lease deed or possession order from appropriate authority or decree or judgment of Courts.*

10.2 தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(3)ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது ஒரு விவசாயம் மற்றும் குடிசையல்லாத தாழ்வழுத்த மின்இணைப்பை பெறவேண்டும் எனில் விண்ணப்ப படிவம் 1ன் படி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். மேற்கண்ட விண்ணப்ப படிவத்தின் நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*FORM-1*
*Application Form for L.T. Service connection (except Agriculture and Hut)*
*FORM OF REQUISITION FOR SUPPLY OF LOW TENSION ENERGY ( SINGLE PHASE / THREE PHASE) [Refer regulation 27(3)]*

*To*

*The Designated Engineer*
*(Address of the Licensee)*

*Sir,*

*1. I hereby request you to supply electrical energy to the premises hereinafter described.*

*(Note : This undertaking does not preclude a separate written contract being entered into, if so desired by the Licensee or the consumer.)*

*2. I agree to pay for said energy, service connection charges, the deposit of such security, meter rent, as may be demanded in accordance with the scale of rates prescribed under Tamil Nadu Electricity Distribution Code, Supply Code, notifications and orders issued in this regard by Tamil Nadu Electricity Regulatory Commission.*

*3. I wish to be charged under Tariff ………… under schedule of the TNERC tariff order dated........... .*

*4. I agree to take supply for ……………. years and utilize the energy in the premises described hereunder or outside the premises for my bonafide use.*

*5. In case I sell or otherwise dispose of the property / vacate the premises while the supply is continued, I agree to give one Calendar month notice in writing and pay all the arrears to the Licensee. Failing such notice, I hold myself responsible for energy consumed in the premises till such notice is given to the Licensee.*

*6. Description of the premises*
*Door No. and / or name of the house or premises*

*Street*

*Town / Village and Taluk*

*Owned by (Name in Block Letters)*

*Tenanted by (Name in Block Letters)*

*Applicant's address for correspondence:*

*The following are my requirements*

*7. The following are my requirements*

| *(A) Lighting* | *Number of Points* | *Wattage of points* | *Total wattage* |
|---|---|---|---|
| *(i) Lights* | - | - | - |

| | | | |
|---|---|---|---|
| *(ii) Fans* | - | - | - |
| *(iii) Convenient wall plugs* | - | - | - |
| *(B) Domestic electrical apparatus:* | | | |
| *(i) Cookers* | - | - | - |
| *(ii) Water heaters* | - | - | - |
| *(iii) Refrigerator* | - | - | - |
| *(iv) Air Conditioners* | | | |
| *(v) Other purpose* | - | - | - |
| *(vi) Convenient wall plugs* | | | |

*(C) Power Loads*

*(i) Domestic*

*(ii) Industrial*

*(iii) Welding*

*(iv) Other purposes*

*(v) Convenient Wall Plugs*

*Demand applied for in KW*

*The wiring has been completed on :*

*Signature of the Applicant*

*Place :*
*Date :*
*Note : The application shall be accompanied with the following documents:*

*(i) Certified copy of proof of ownership such as sale deed/ partition deed/gift settlement /allotment letter/computer patta / ownership certificate issued by revenue department officials /court judgment or recent property tax receipt.*

*(ii) In the case of joint property, certified copies of proof of ownership such as legal heir certificate along with parent documents specified in note(i) above and consent letters from co-owners. If consent letter is not produced, an indemnity bond with enhanced security deposit.*

*(iii) If the applicant is not the owner, consent letter from owner in FORM No.5 or valid proof of occupancy, and indemnity bond in FORM No.6.*

*FOR LICENSEE'S USE ONLY*
*Application registered as No. dated*

*Note.1. In case of transfer of the service, fresh application should be signed by the transferee (or a letter signed by both the transferor and transferee, agreeing to the above conditions for transfer should be obtained).*

*2. Additions or omissions to the connected load to be notified to the Licensee before effecting the electricity connections.*

*PRECAUTION TO BE ADOPTED BY CONSUMERS, OWNERS, ELECTRICAL CONTRACTORS, ELECTRICAL WORKMEN, AND OTHER SUPPLIERS OF ENERGY*

*No electrical installation work, including additions, alterations, repairs and adjustments to existing installations except such replacement of lamps, fans, fuses, switches and other component parts of the installations as in no way alter its capacity or character shall be carried out upon the premises or on behalf of any consumer or owner for the purpose of the supply of energy to such consumer or owner, except by an authorized person specified by the Authority" .*

10.3 மேற்கண்ட விண்ணப்பத்தின் குறிப்பின்படி கீழ்கண்ட ஆவணங்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(i) உடமைகளின் சான்றிடப்பட்ட நகல்களான விற்பனை ஒப்பாவணம்/ பிரிவினை ஒப்பாவணம்/பரிசு ஒப்பந்தம்/ஒதுக்கீடு கடிதம்/கணினி பட்டா/வருவாய்த்துறை அலுவலர்களால் வழங்கப்பட்ட உரிமை பத்திரங்கள்/ நீதிமன்ற தீர்ப்பு அல்லது சொத்துவரி ரசீது

(ii) கூட்டுச் சொத்து உடமைகளுக்கு உடமைகளின் சான்றிடப்பட்ட நகல்களான வாரிசு சான்றிதழ் அதனோடு குறிப்பு (1)ல் கூறப்பட்டிருக்கும் மூல ஆதாரங்களும் மற்றும் கூட்டு உரிமையாளர்களின் இசைவு கடிதங்கள் கூட்டுரிமையாளர்களின் இசைவு கடிதங்கள் இல்லை என்றால் ஈட்டுறுதிபிணைமுறிவோடு மிகுதிபடுத்தப்பட்ட காப்பீட்டுத்தொகை

(iii) விண்ணப்பதாரர் உடமையாளர் இல்லை எனில் உடைமையாளரின் இசைவு கடிதம் படிவும் 5ல் சமர்ப்பிக்க வேண்டும் அல்லது செல்லதக்க குடியிருப்பவர் சான்றும் படிவம் 6ல் உள்ள ஈட்டுறுதி பிணை முறிவும் சமர்ப்பிக்கவேண்டும்

10.4 எனவே, மேற்கண்ட பத்தி 10.3 குறிப்பிட்டுள்ள தேவையான சம்பந்தபட்ட ஆவண நகல்களுடன் தாழ்வழுத்த மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தை (படிவம்–1) சமர்ப்பித்தால் மின்இணைப்பு பெறமுடியும் என்று தெரிகிறது.

11. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>

11.1 இந்த மேல்முறையீட்டாளர் திரு. சுப்பிரமணியன் பெயரில் மின்இணைப்பு வழங்கியுள்ள 2/22ஏ என்ற எண்ணில் உள்ள வீடு மற்றும் 5/32 எண்ணில் உள்ள ரைஸ்மில் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு எண்.OS 328/2011 மற்றும் OS 322/2011 ஆகியவைகள் நிலுவையில் உள்ள பொழுது மேற்கண்ட மின்இணைப்பு வழங்கியது தவறு என்று வாதிட்டார். மேலும், மேற்கண்ட சொத்துக்களில் திரு. சுப்பிரமணியன் பெயரில் மின்இணைப்பு வழங்க ஆட்சேபனை 27.2.2016ல் தெரிவித்துள்ளதாகவும் வாதிட்டுள்ளார்.

11.2 மேலும், போலியான ரசீது அடிப்படையில் மின்இணைப்பு வழங்கப்பட்டது என்று தெரிவித்து கொட்டகுடி ஊராட்சி தலைவர் அவர்கள் உதவி பொறியாளருக்கு மின்இணைப்பு வழங்குவதை நிறுத்தி வைக்க கூறியுள்ளார் என்றும் வாதிட்டு அதற்கு ஆதாரமாக ஊராட்சி தலைவரின் கடிதத்தின் நகலையும் அளித்துள்ளார்.

11.3 மேல்முறையீட்டாளரின் 27.2.2016 நாளிட்ட ஆட்சேபனை கடிதத்திற்கு மேற்கண்ட 5/22Aல் உள்ள வீடு மேல்முறையீட்டாளருக்கு சொந்தம் என்றால் அதற்கான வருவாய்த்துறை ஆவணங்கள் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டது. மேல்முறையீட்டாளர் மேலும் ஒரு வார கால அவகாசம் வழங்குமாறு 29.3.2016ல் கோரினார். ஆனால், இதுவரை சம்பந்தப்பட்ட வருவாய்துறை ஆவணங்களோ கடிதமோ சமர்ப்பிக்கவில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

11.4 திரு சுப்பிரமணியன் கொட்டகுடி அவர்கள் மேலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்துள்ள வழக்கு OS No.322/2011 வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் கதவு எண்.5/23(பழைய எண்.5/22A) உள்ள வீட்டிற்கு அவரது பெயரில் மின்இணைப்பு வழங்க கோரி 10.5.2016ல் கீழ்கண்ட ஆவணங்களுடன் விண்ணப்பபம் சமர்ப்பித்துள்ளார்.

1. கொட்டகுடி பஞ்சாயத்து மூலம் வழங்கப்பட்ட கதவு எண்.5/23 உள்ள வீட்டுவரி ரசீது
2. கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று நாள் 22.2.2016

3. கிராம நிர்வாக அலுவலர் நான்கு மாலுடன் வழங்கிய சான்று நாள் 30.2.2016

4. ஆதார் அடையாள அட்டை நகல்

5. Copy of judgment in OS 118 of 1977

6. Copy of Advocate commissioners Report filed on OS No.118/1999.

7. Copy of order in E.P. No.230/1990 in OS No.118/1977.

8. Copy of order in IA No.332 of 1988 in OS No.478 of 1986.

9. Copy of the order in SLP No.16118 of 1990 dt.4.3.1992

10. Copy of the order in IA No.1023 of 2011 in O.S. No.322/2011

11. Copy of the order in IA No.678 of 2012 OS No.322 /2011.

12. Copy of the order in CRLOP (MD) No.19840/15.

11.5 கொட்டக்குடி கிராம கதவு எண்.5/23 (பழைய எண்.5/22ஏ) உள்ள வீடு சம்பந்தமாக இருவேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதால் மேற்கண்ட விண்ணப்பத்திற்கு மின்இணைப்பு வழங்கலாமா? என்று சட்டக்கருத்துரை Standing Counsel for TNEB யிடம் பெறப்பட்டது என்றும் வாதிட்டுள்ளார் மேலும், சட்டக்கருத்துருவில் தெரிவித்துள்ளபடி Indemnity Bond மற்றும் இருமடங்கு காப்புத்தொகை பெறப்பட்டு 13.7.2016ல் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு 20.7.2016ல் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டுள்ளார்.

11.6 மேலும், மின்இணைப்பு வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

11.7 எதிர்மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது திரு. ஆர்.எம். சுப்பிரமணியன், கொட்டகுடி அவர்கள் மேற்கண்ட மின்இணைப்பு கோரும் வீட்டிற்கு வரிவிதிப்பு ரசீது சமர்ப்பித்துள்ளார் என்று தெரிகிறது. அந்த ரசீது எண்.106231 நாள் 19.2.06 ஆகும். 2015–16ம் ஆண்டிற்கான வரி ரூ.330/– செலுத்தியுள்ளதாக அந்த ரசீதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11.8 மேல்முறையீட்டாளர் போலியாக தயாரிக்கப்பட்ட ரசீது வின் அடிப்படையில் வழங்கப்பட்ட மின்இணைப்பு ரத்து செய்ய வேண்டும் என்று வாதிட்டுள்ளார். அதற்கு ஆதாரமாக தலைவர்,

கொட்டகுடி ஊராட்சி அவர்கள் எழுதிய கடிதத்தையும் சமர்ப்பித்து அதில் மின்இணைப்பு வழங்குவதை தற்சமயம் நிறுத்தி வைக்க கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் வாதிட்டுள்ளார். அந்த கடிதத்தின் உண்மை நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ அனுப்புநர்*
*S. அனிதா,*
*தலைவர்,*
*கொட்டகுடி ஊராட்சி,*
*மேலூர் ஊராட்சி ஒன்றியம்,*

*பெறுநர்*
*உயர்திரு உதவி பொறியாளர்*
*ஊரகம்/தெற்கு/மேலூர்,*
*தமிழ்நாடு மின்சாரவாரியம்,*
*மேலூர்*

*ஐயா,*

*எங்களது ஊராட்சியில் கொட்டக்குடி கிராமத்தில் உள்ள திரு.* R. *சுப்பிரமணியன் என்பவர்க்கு* ***5/23, 5/89*** *ஆகிய இரண்டு கதவிலக்கத்தில் வீட்டுவரி ரசீது கொடுத்து உள்ளோம். மேற்கண்ட கதவிலக்கத்திற்கு மின்இணைப்பு வேண்டி விண்ணப்பித்தால் பிரச்சனையில் உள்ளதால் மின்இணைப்பு வழங்குவதை தற்சமயம் நிறுத்தி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*ஒப்பம்/xxx xxx xxx*
*தலைவர்,*
*கொட்டக்குடி ஊராட்சி*
*மேலூர் ஒன்றியம்”*

**11.9** மேற்கண்ட கடிதத்தை கூர்ந்துபடிக்கும்பொழுது தலைவர், கொட்டக்குடி ஊராட்சி அவர்கள் கதவிலக்கம் **5/23** மற்றும் **5/89** ஆகியவற்றிற்கு வீட்டு வரி ரசீது கொடுக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்துள்ளார்கள். ஆனால், மேற்கண்ட கதவு இலக்கத்திற்கு மின்இணைப்பு வேண்டி விண்ணப்பித்தால் பிரச்சனை உள்ளதால் மின்இணைப்பு வழங்குவதை நிறுத்தி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**11.10** மேற்கண்ட தகவல்களின்படி வீட்டுவரி ரசீது போலியாக தயாரிக்கப்பட்டது என்ற வாதம் ஏற்புடையதல்ல. ரசீது தவறாக கொடுக்கப்பட்டு இருந்தால் அந்த ரசீது ரத்து செய்யப்பட்டது என்று

தலைவர், கொட்டக்குடி ஊராட்சி அவர்கள்  தெரிவித்து இருக்க வேண்டும். மேலும், ரசீது போலி என்றால் மேற்கண்ட ஊராட்சியினால்  அந்த ரசீது கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்து இருக்க வேண்டும்.  அவ்வாறு தெரிவிக்கப்படவில்லை. மேலும், ரசீது வழங்கப்பட்டுள்ளது என்று ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட நிலையில் மேல்முறையீட்டாளரின் வாதமான போலியான ரசீதின் அடிப்படையில் வழங்கப்பட்ட மின்இணைப்பு துண்டிக்க படவேண்டும் என்ற வாதம் ஏற்புடையது அல்ல.

**11.11** மேலும், வழக்குகள் நிலுவையில் உள்ள பொழுது மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் மேல்முறையீட்டாளர் வாதிட்டுள்ளார்.

**11.12** எதிர்மனுதாரர் வாரியத்தின் வழக்கறிஞர் (Standing Counsel) சட்ட கருத்துரு பெற்றுத்தான் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதால் அந்த 1.7.2016 நாளிட்ட வாரியத்தின் வழக்கறிஞரின் சட்டக்கருத்துரு(legal opinion) வின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*With reference to the letter cited above, the documents 2 to 18 were perused. One R.M. Subramanian has submitted an application for grant of new service connection to the house situated at S. No. 566 120, KottakudiVillage, Madurai. The intending consumer has submitted House Tax Receipt, Village Administrative Officer Certificate. The said RM. Subramanaian has also submitted some of the court Judgments and Decree which are in favour of him. It seen that after issuing House Tax Receipt the Panchayat President has given a letter stating that the house premises is under problem and therefore electricity connection shall not be granted.*

*One R.Muthuramalingam is objecting to grant electricity connection to the said premises stating that there are civil cases filed by both R.M.Subramanianand also by the objector. All the civil cases are pending for adjudication. It is pertinent to state that the indenting consumer and the objector are brothers. It is seen from the records that the first round of litigation has went upto Supreme Court and the intending consumer has favourable orders.*

*Under these circumstances, I am of the opinion that the application shall be processed and electricity connection shall be granted. Section 43 of Electricity Act, 2003 envisages to granting connection on request. Therefore a statutory duty is cast on the TANGEDCO to provide connection if other conditions are satisfied. Regulation 27 (4) of the Tamil Nadu Electricity Distribution Code stipulates that if there is any objection / impediment then the T ANGEDCO shall grant electricity connection after obtaining indemnity bond and on payment of twice the normal rate as security deposit. Since there is objection, it is directed to grant electricity connection as per Regulation 27(4) of the Tamil Nadu Electricity Distribution Code by obtaining indemnity bond and on payment of twice the normal rate as security deposit. Advised accordingly.*

11.13 மேற்கண்ட சட்டக்கருத்துருவின்படி இருதரப்பினராலும் வழக்குகள் தொடரப்பட்டு அந்த வழக்குகள் நிலுவையில் உள்ளன. கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி முதல் சுற்றில் உச்ச நீதிமன்றம்(Supreme Court) வரை சென்ற வழக்கில் விண்ணப்பதாரருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வீட்டுவரி ரசீது, தலைவர் கொட்டக்குடி பஞ்சாயத்தின் கடிதம், கிராம நிர்வாக அலுவலரின் சான்று ஆகியவைகளும் பரிசீலிக்கப்பட்டுதான் சட்டக்கருத்துரு வழங்கப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகிறது. மேலும், ஆட்சேபனை இருக்கும்பொழுது Indemnity Bond பெற்றுக்கொண்டு வைப்புத்தொகை இரு மடங்கு பெற்று மின்இணைப்பு வழங்கலாம் என்று மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(4)ல் கூறப்பட்டுள்ளதாலும், மின்சார சட்டம் 2003ன் படி பிரிவு 43ன் படி விண்ணப்பதாரருக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்பதாலும் மின்இணைப்பு வழங்க சட்ட ஆலோசனை வழங்கியுள்ளார்.

11.14 என்னுடைய வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வின்படி ஒரு மின்இணைப்பு கோரும் விண்ணப்பதாரரும் அவரின் வளாகத்திற்கு அவர் உரிமையாளர் என்பதற்கு கொடுக்கப்பட

வேண்டிய ஆவணங்களில் வீட்டு வரி ரசீது உள்ளது. எனவே, திரு. R.M. சுப்பிரமணியன் அவர்களின் விண்ணப்பம் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி (3)ல் கூறியுள்ளவாறு அமைந்துள்ளது என்பதால் மின்இணைப்பு பெற தகுதியானது ஆகும்.

11.15 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட சொத்து அவரின் உரிமையில் உள்ளது என்பதற்கு ஆதாரங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை என்பதாலும் வழக்குகள் நிலுவையில் உள்ள பொழுதும் ஏற்கனவே தீர்வு அளிக்கப்பட்ட வழக்குகளின்படி தீர்வுகள் திரு. RM சுப்பிரமணியன் அவர்களுக்கு சாதகமாக உள்ளது என்பதாலும் மேலும், கிராம நிர்வாக அலுவலர் சான்று ஆதார் அட்டை ஆகியவற்றிலும் திரு. சுப்பிரமணியன் மேற்கண்ட முகவரியில் வசிக்கின்றார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதாலும் மின்இணைப்பு வழங்க கூடாது என்று நீதிமன்ற உத்தரவு இல்லாத நிலையில் திரு. திரு. RM சுப்பிரமணியனின் மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் விதிகளின்படி சரியாக உள்ளதால் மின்இணைப்பு வழங்கியது சரி என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12. <u>வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு</u>**

12.1 இந்த மேல்முறையீட்டாளர் திரு. திரு. RM சுப்பிரமணியன் பெயரில் 5/22A என்ற வீட்டில் பெற்ற மின் இணைப்பை அது போலியான ரசீது மூலம் பெறப்பட்டுள்ளதால் துண்டிப்பு செய்ய வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

12.2 எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிகளின்படி கீழ்கண்ட காரணங்களுக்கு மட்டுமே எந்த ஒரு மின்இணைப்பையும் மின்துண்டிப்பு செய்ய இயலும் என்று வாதிட்டுள்ளார். (i)நீதிமன்ற உத்தரவு (ii) மின்திருட்டு நடைபெற்றால் (iii) மின்கட்டணம் செலுத்தாத மின்இணைப்பு (iv) ஆக்கிரமிப்புகளும் அரசினால் அகற்றப்படும் பொழுது (v) மாசுக்கட்டுப்பாட்டு வாரிய உத்தரவு .

**12.3** இந்த மேல்முறையீட்டாளர் மின்னிணைப்பு எண்.**116–010–1289**ஐ மின்துண்டிப்பு செய்வேண்டும் என்று வாதிடுவதால், இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பின் விதி எண் **21**, **23**A, (**1**A) மற்றும், தமிழ்நாடு மின்சார விநியோக விதிதொகுப்பின் விதி எண் **33** ஆகியவற்றை ஆராய வேண்டும். எனவே, மேற்கண்ட விதிகள் அந்தந்த விதித் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*(i) <u>மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி எண். 21.</u>*

*“21. மின்வழங்கல் துண்டிப்பு*

*சட்டத்தின் **56** ஆவது சட்டப் பிரிவு, மின் கட்டணம் செலுத்தத் தவறிய மின் வழங்கல் துண்டிப்பு பற்றி பின்வருமாறு கூறுகிறது.*

*"**(1)** அவருக்கு மின்சாரம் வழங்கல் அல்லது செலுத்துதல் அல்லது பகிர்தல் அல்லது சுமந்து செல்லல் (wheeling) தொடர்பாக உரிமதாரருக்கோ மின்னாக்கக் குழுமத்துக்கோ, தனியொருவர், மின்சாரக் கட்டணமாகவோ அல்லது அது தொடர்பான மின்சாரக் கட்டணமல்லாத வேறுபிற தொகையாகவோ அமைந்த நிலுவைகளைக் கட்டப் புறக்கணித்தால், உரிமதாரரோ அல்லது மின்னாக்கக் குழுமமோ (generating company) எழுத்து மூலமாகச் சரியான (clear) **15** நாட்களுக்கான எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்து விட்டு, அவருக்குரிய கட்டணத்தை அல்லது வேறு பிற தொகையை, வழக்கு மூலமும் மீட்பதற்குக் குந்தகமேதுமில்லாதபடி, மின்சார வழங்கலைத் துண்டிக்கலாம். மேலும் அந்நோக்கங்கருதி மின்சாரம் வழங்கும் எந்த மின் தொடரையும் துண்டிக்கலாம் அல்லது கழற்றிவிடலாம். மின்சாரத்தை வழங்கிய, செலுத்திய, பகிர்ந்த அல்லது சுமந்து சென்ற பணியமைப்புகள் உரிமதாரரின் அல்லது மின்னாக்கக் குழுமத்தின் சொத்தாகையால், மின் கட்டணத்தையோ அது சார்ந்த வேறுபிற கட்டணத்தையோ, உரியவர் மின் வழங்கல் துண்டித்தபிறகு மீளவிணைப்பதற்காகும் செலவினங்களையும் சேர்த்துக் கட்டும்வரை மின்னிணைப்புத் துண்டிப்பு தொடரலாம். ஆனால் அதற்கு மேல் நீடிக்கக் கூடாது.*

*எனினும் மறுப்பு தெரிவித்துவிட்டு, உரிய தனியொருவர் பின்வரும் வகை வைப்புத் தொகைகளைச் செலுத்தியிருந்தால் மின்சார வழங்கல் துண்டிக்கப்படக்கூடாது.*

*a) அவரிடம் கோரப்பட்ட தொகைக்கீடான பணம்*

*b) முந்தைய ஆறுமாத மின்கட்டண அடிப்படையிலான மாதச் சராசரிப்படியமைந்த நிலுவைத்தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகையைக் கட்டியிருந்தால் அவருக்கும் உரிமதாரருக்கும் இடையிலான தகராறு தீரும்வரை மின்வழங்கல் தொடரப்பட வேண்டும்.*

*(2) தற்போது நடப்பில் உள்ள பிற சட்டத்தில் இது குறித்து எவை உள்ளடங்கியிருந்தபோதிலும், எந்த ஒரு தொகையும், எந்தவொரு நுகர்வோரிடமிருந்தும் முதலில் கட்ட வேண்டிய தேதியிலிருந்து தொடர்ந்து, மின் வழங்கலுக்காக, பாக்கிக் கட்டணமாக குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, இரண்டு*

*ஆண்டுகளுக்குப் பின் இந்தப்பிரிவின்படி வசூலிக்கப்படக்கூடாது. உரிமதாரர் அத்தகைய சூழலில் மின் வழங்கலைத் துண்டிக்கக் கூடாது."*

*சட்டத்தின் மேற்குறிப்பிட்ட சட்டத் துணைப்பிரிவு (1) இன்படியான விதி வகுப்பை, நடப்பில் உள்ள வேறு சட்ட விதிமுறைகளுடன் சேர்ந்து செயல்படுத்த வேண்டுமே ஒழிய தவிர்த்துவிட்டோ, புறக்கணித்து விட்டோ நடைமுறைப்படுத்தக் கூடாது. இதன்படி உரிமதாரர் நீர் (மாசு தவிர்ப்பு மற்றும் கட்டுப்பாட்டு)ச் சட்டம் 1974, காற்று (மாசு தவிர்ப்பு மற்றும் கட்டுப்பாட்டு)ச் சட்டம் 1981 மேலும் சுற்றுச்சூழல் (மாசு தவிர்ப்பு மற்றும் கட்டுப்பாட்டு)ச் சட்டம் 1986 போன்ற பிற சட்ட விதிகளின் ஆட்சிக்குட்பட்டே மின் வழங்கல் துண்டித்தலைச் செய்யவேண்டும்.”*

(அ) மேற்கண்ட விதியினை கூர்ந்து ஆராயும் பொழுது நாம் அறிவது ஒரு மின் இணைப்பின் மின்சார கட்டணம் அல்லது அது தொடர்பான மின்சார கட்டணம் அல்லாத வேறு தொகையாகவோ அமைந்த நிலுவைகளைக் கட்ட மின்நுகர்வோர் புறக்கணித்தால் உரிமம்தாரர் எழுத்து மூலமாக சரியாக 15 நாட்களுக்கான எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்துவிட்டு அவருக்குரிய மின்கட்டணத்தை அல்லது வேறு பிற தொகையை வழக்கு மூலம் மீட்பதற்கு குந்தகம் இல்லாதபடி மின் வழங்கலை துண்டிக்கலாம் என்று தெரிகிறது. மேலும், உரிமதாரர் நீர் (மாசு தவிர்ப்பு கட்டுப்பாட்டுச்) சட்டம் 1974 காற்று, மாசு தவிர்ப்பு மற்றும் கட்டுப்பாட்டுச்) சட்டம் 1981 . மேலும், சுற்று சூழல் (மாசு தவிர்ப்பு மற்றும் கட்டுப்பாட்டுச்) சட்டம் 1986 போன்ற பிற சட்ட விதிகளுக்கு உட்பட்டும் மின் வழங்கலை துண்டிப்பு செய்யலாம் என்றும் தெரிகிறது.

*(ii)* <u>மின்சார வழங்கல் விதி தொகுப்பின் விதி 23A(1A)</u>

*“(A) மின்னளவி நிலைகுலைப்பும் மின்சாரத் திருட்டும்*

xxx xxx xxx

*(1A) இந்த சட்டத்தின் வகைமுறைகளுக்கு பாதகமின்றி உரிமம்தாரர் அல்லது நேர்வுக்கேற்ப, மின் வழங்குநர், அத்தகைய மின்திருட்டை கண்டுபிடித்ததின் பேரில், உடனடியாக மின்வழங்கலைத் துண்டிக்கலாம் :–*

xxx xxx xxx

xxx xxx xxx ”

(அ) மேற்கண்ட விதியை படிக்கும்பொழுது நாம் அறிவது, விதி 23(A) (IA)ன்படி ஒரு மின் இணைப்பில், மின்திருட்டு ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டாலும், மின் இணைப்பை துண்டிக்கலாம் என்று தெரிகிறது.

***(iii) "<u>மின்சார விதித்தொகுப்பின் விதி 25</u>***

*உரிமதாரரின் பொருத்தமைப்புகளை அல்லது பிற கருவிகளை அகற்ற (நுகர்வோரின்) உறைவிடத்துக்குள் உரிமதாரர் நுழைவதற்கான அதிகாரம்*

*(1) சட்டத்தின் 163 ஆவது சட்டப்பிரிவு, (நுகர்வோரின்) இருப்பிடத்துக்குள் நுழைவதற்கான உரிமதாரரின் அதிகாரம், பற்றிப் பின்வருமாறு கூறுகிறது*

*"1) தான் கருதிய உறைவோருக்குத் தெரிவித்த பிறகு போதுமான கால இடைவெளிக்குப்பின் உரிமதாரர் அல்லது உரிமதாரரால் அதிகாரம் பெற்ற வேறொருவர் பின்வரும் நோக்கத்துக்காக அவரால் சட்டப்படி மின் வழங்கல் தொடர்களையோ பணியமைப்புகளையோ நிறுவி மின்சாரம் தரப்படும், தரப்பட்டுள்ள இருப்பிடத்துக்கு உள்ளோ அல்லது அத்தகைய அமைப்புகளுக்குக் கீழோ, மேலோ, நெடுகவோ, குறுக்கிலோ, உள்ளோ, புறத்தோ அமைந்துள்ள இருப்பிடத்துக்குள்ளோ, மனைக்குள்ளோ அங்கு உறைபவரிடம் வரும் நோக்கத்தின் தகவல் தெரிவித்து நுழையலாம்.*

*(a) ஆய்வு செய்யவும் சோதிக்கவும் பழுது பார்க்கவும் உரிமதாரருக்குச் சொந்தமான மின்சாரம் தரும் சாதனங்களையோ பணியமைப்புகளையோ பொருத்தமைப்புகளையோ மாற்றி அமைக்கவும், அல்லது*

*(b) வழங்கப்பட்ட மின்சார அளவை அல்லது தரப்பட்ட மின்வழங்கலின் மின்சார அளவை உறுதி செய்யவும்; அல்லது*

*(c) மின்வழங்கல் இனி தேவையற்ற நிலையிலோ அல்லது உரிமதாரர் மின்வழங்கலைத் துண்டிக்கவோ, அகற்றவோ அதிகாரம் பெற்ற நிலையிலோ, உரிமதாரருக்குச் சொந்தமான எந்தவொரு மின்வழங்கல் தொடரையும், மின்னளவிகளையும், பொருத்தமைப்புகளையும், பணியமைப்புகளையும், சாதனங்களையும் அகற்றவும்.*

*2) உறைபவருக்கு 24 மணி நேரத்திற்கு குறையாமல் எழுத்து வடிவிலான எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்துவிட்டு, மேற்சொன்னபடி உரிமதாரரோ அல்லது உரிமதாரரால் அதிகாரம் பெற்ற தனியொருத்தரோ செயல்பாட்டு நீதிபதியிடமிருந்து பெற்ற சிறப்பு ஆணையை நிறைவேற்ற,*

*(a) துணைப்பிரிவு ( i) ன்படி குறிப்பிட்டுள்ள நோக்கத்துக்காக, அதில் குறிப்பிட்டுள்ள இடத்திலோ அல்லது மனையிலோ நுழையலாம்.*

*(b) அவரால் மின்சாரம் வழங்கப்படும் எந்தவொரு இருப்பிடத்துக்குள்ளும், நுகர்வோர் மின்சாரம் பெறப் பயன்படும் மின்கம்பிகளையோ, பொருத்தமைப்புகளையோ பார்வையிடவும், சோதிக்கவும், அவை நுகர்வோருக்குச் சொந்தமானவையாக இருந்தாலும் நுழையலாம்.*

*3) மேற்சொன்னபடி உரிமதாரரோ அல்லது உரிதாரரால் அதிகாரம் பெற்ற வேறொருவரோ துணைப்பிரிவுகள் 1, 2 இல் சொன்ன செயல்களை நிறைவேற்றுவதற்காக நுழைய, நுகர்வோர் மறுப்பு தெரிவித்தாலோ அல்லது அந்த உரிமதாரரோ அல்லது வேறொருவரோ அவரது இருப்பிடத்துக்குள் அல்லது மனைக்குள் நுழைந்த பிறகு மேற்குறிப்பிட்ட துணைப்பிரிவுகளில் அதிகாரம் வழங்கப்பட்ட செயல்களை நிறைவேற்ற இசையாவிட்டாலோ அல்லது அப்படி நுழைந்து செயல்படும் போது தக்க வசதிகளைத் தர மறுத்தாலோ, உரிமதாரர் நுகர்வோருக்கு எழுத்துமூலமாய் கொடுத்த 24 மணிநேர அறிவிப்பின் காலக்கெடு முடிந்ததும் நுகர்வோருக்கு வழங்கியுள்ள மின்வழங்கலை, அவர் மறுப்பு தெரிவிக்கும் வரை, துண்டித்து வைக்கலாம். ஆனால் அதற்கப்பால் துண்டிப்பு நீடிக்கக் கூடாது."*

(அ) மேற்கண்ட விதியினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம்அறிவது உரிமம்தாரரோ அல்லது உரிமம்தாரரால் அதிகாரம் பெற்ற வேறு ஒருவரோ, துணைப்பிரிவுள் 1,2இல் செயல்களை நிறைவேற்றுவதற்கு நுகர்வோர் மறுப்பு தெரிவித்தாலோ அல்லது மேலே குறிப்பிட்ட துணைப்பிரிவுகளில் அதிகாரம் வழங்கப்பட்ட செயல்களை நிறைவேற்ற இசையாவிட்டாலோ 24மணி நேர அறிவிப்பு கொடுத்து மின்னிணைப்பை துண்டிக்கலாம் என்று தெரிகிறது.

(iv) மேலும், இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 33 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"33. இசைவுப்பத்திரங்கள் :–***

*(1) கோரும் நுகர்வோர்கள் காப்புவைப்புத் தொகையையும் மின்னிணைப்புக் கட்டணத்தையும் செலுத்தும்போது, தரப்படும் படிவத்தில் அமைந்த மின்சார வழங்கல் தொடர்பான இசைவுப் பத்திரத்தில் கையொப்பமிட வேண்டும். இசைவுப் பத்திரத்தில் கையொப்பமிட்டு அதை ஏற்றபிறகும் காப்பு வைப்புத் தொகையையும், மின்னிணைப்புக் கட்டணத்தையும் செலுத்திய பிறகுமே மின்னிணைப்பு நீட்டிப்புப் பணி மேற்கொள்ளப்படும். வேளாண்மை, தொழிலக வகையினங்கள் தவிர, பிற தாழ்ந்த அழுத்த மின்னிணைப்புகளுக்கு விண்ணப்பமே, விண்ணப்பம் மற்றும் இசைவுப் பத்திரம் இரண்டுமாகக் கொள்ளப்படும். வேளாண்மை மற்றும் தொழிலகம் சார்ந்த தாழ் அழுத்த மின்னிணைப்புகளைப் பொறுத்தவரையில் பின்னிணைப்பு III இல் உள்ள படிவம் 7 இல் இசைவுப் பத்திரம் அமைய வேண்டும். உயர் அழுத்த நுகர்வோர்களைப் பொறுத்தவரையில், பின்னிணைப்பு III இல் உள்ள படிவம் 8 இல் இசைவுப் பத்திரம் அமைய வேண்டும்.*

*(2) ஒவ்வொரு இசைவுப் பத்திரமும் குறிப்பிட்ட இருப்பிடத்துக்கும் குறிப்பிட்ட நோக்கத்துக்கும் மட்டுமே உரியதாகும். அத்தகைய மாற்றத்துக்கு ஆகும் நிகழ் செலவுகளைக் கட்டி உரிமம்தாரர் குறிப்பிடும் அது சார்ந்த உடன்படிக்கைகளையும் ஏற்றால், பொறியாளர், அவரது விருப்பத்தின் பேரில் மின் வழங்கல் புள்ளியை ஓரிடத்திலிருந்து வேறோரிடத்துக்கு மாற்றிட இசையலாம்.*

*(3) தான் அப்படிக் கருதும் எண்ணத்தை வெளியிடும் ஒரு மாத அறிவிப்பை உரிமம்தாரருக்கு எழுத்து மூலமாகத் தந்துவிட்டு, நுகர்வோர் தனது இசைவுப் பத்திரத்தை அவரே முடித்துக் கொள்ளலாம்.*

*(4) நுகர்வோர், இசைவுப் பத்திரத்தில் உள்ள உடன்படிக்கைகளையோ, விதித்தொகுப்பின் விதிமுறைகள் மற்றும் வரையறைகளையோ, சட்டத்தின் கீழமைந்த சட்டங்களும் விதிகளும் உள்ளடக்கிய இசைவுப் பத்திரம் தொடர்பான எந்தவொரு சட்டத்தின் விதி வகுப்புகளையோ அல்லது அவ்வப்போது வெளியிடப்படும் வேறுபிற ஆணைகளையோ மீறினால், அத்தகைய விதி மீறலை குறிப்பிடும் ஒரு மாத அறிவிப்பை உரிமம்தாரர் தந்து விட்டு, நுகர்வோருடன் செய்து கொண்ட இசைவுப் பத்திரத்தை உரிமம்தாரரே முடித்துக் கொள்ளலாம். அத்தகைய இசைவுப் பத்திர முடிப்பிற்கான காரணங்களை உரிமம்தாரர், நுகர்வோருக்கு அறிவிக்க வேண்டியது அவருடைய கடமையாகும்.”*

(அ) மேற்கண்ட மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 33(3) ஐ கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது, நுகர்வோர், தன்னுடைய இசைவு பத்திரத்தை முடித்துக் கொள்ள விரும்பினால் (Termination of Agreement) உரிமம்தாரருக்கு ஒரு மாத அறிவிப்பை தர வேண்டும் என்று தெரிகிறது.

(ஆ) மேற்கண்ட மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 33(4)இன்படி நுகர்வோர், இசைவு பத்திரத்திலுள்ள உடன்படிக்கைகளையோ, விதித் தொகுப்பின் விதிகளையோ மற்றும் வரையறைகளையோ, சட்டத்தின் கீழமைந்த சட்டங்களும், விதிகளும் உள்ளடக்கிய இசைவுப் பத்திரம் தொடர்பான எந்த ஒரு சட்டத்தின் விதி வகுப்புகளையோ அல்லது அவ்வப்போது வெளியிடும் வேறுபிற ஆணைகளையோ, மீறினால், அத்தகைய ஆணை மீறலை குறிப்பிட்டு ஒரு மாத அறிவிப்பை, உரிமம்தாரர் தந்துவிட்டு நுகர்வோர் செய்து கொண்ட இசைவு பத்திரத்தை முடித்துக் கொள்ளலாம் என்று தெரிகிறது.

12.4 மேலேயுள்ள பத்திகளில் உள்ள விபரங்களின்படி ஒரு மின்னிணைப்பில் மின்வழங்கல் விதி 21, 23A(1A) மற்றும் 25(3) ஆகிய விதி மீறல்கள் உள்ளது என்ற நிலையில் மின் துண்டிப்பு செய்யமுடியும் என்று தெரிகிறது. மேலும், தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி33(4)–ன் படி இசைவு பத்திரத்தை முடித்து கொள்ளவேண்டும் என்று உரிமம்தாரர் அறிவிப்பு கொடுத்தும் ஒரு மின்இணைப்பின் இசைவு பத்திரத்தை முடித்துக் கொள்ள முடியும் என்றும், மற்றும் நுகர்வோர் மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 33(3)–ன் படி ஒரு மாத அறிவிப்பு கொடுத்தும் இசைவு பத்திரத்தை முடித்துக் கொள்ளமுடியும் என்றும் தெரிகிறது.

## 13. <u>வழக்கெழு வினா நான்கிற்கான தீர்வு</u>

13.1 இந்த மேல்முறையீட்டாளர் சொத்து பற்றிய வழக்குகள்,நிலுவையாக உள்ளபொழுது போலியான வீட்டு வரி ரசீதுகளின் பேரில் மின்இணைப்பு வழங்கப்பட்டதால் மின்இணைப்பு எண்.116–010–1289ஐ மின்துண்டிப்பு செய்ய வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

13.2 எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி எந்த ஒரு மின் இணைப்பையும் நீதிமன்ற உத்தரவு மின் திருட்டு நடைபெற்றால் மின்கட்டணம் செலுத்ததாத நிலை, ஆக்கிரமிப்புகள் அரசினால் அகற்றப்படும் பொழுது மற்றும் மாசுகட்டுப்பாட்டு வாரிய உத்தரவு ஆகிய காரணங்களால்தான் மின்துண்டிப்பு செய்ய இயலும் அவ்வாறு எந்த காரணங்களும் இல்லாத நிலையில் மின்துண்டிப்பு செய்ய முடியாது என்று வாதிட்டுள்ளார்.

13.3 மேலும், நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்குகளில் நீதிமன்றத்தால் வழங்கப்படும் உத்தரவுகளின்படியே மேல் நடவடிக்கை எடுக்க இயலும் என்பதுடன் விண்ணப்பத்துடன் Indemnity Bond பெறப்பட்டுள்ளதால் இது சம்பந்தமாக நீதிமன்ற வழக்கு எந்த விதத்திலும் பாதிப்படைய வாய்ப்பில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

**13.4** பத்தி **11.10**இல் உள்ள ஆய்வின்படி மேற்கண்ட மேல்முறையீட்டாளரின் வாதமான போலியான ரசீது பெற்றுகொண்டு மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்ற வாதம் ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13.5** மேலும், இந்த மேல்முறையீட்டாளர் மின்இணைப்பை துண்டிப்பு செய்ய வேண்டும் என்று கோரும் காரணங்கள் வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வில் தெரிவிக்கப்பட்ட காரணங்களாக இல்லை என்றும் தெரிகிறது.

**13.6** மின்இணைப்பு வழங்கப்பட்ட **5/23**, கொட்டகுடி என்ற வீட்டில் திரு. RM சுப்பிரமணியன் என்பவர் குடியிருந்து மேற்கண்ட மின்இணைப்பை பயன்படுத்தி வருகிறார் என்றும் தெரிகிறது.

**13.7** மின்சாரம் ஒரு அடிப்படை தேவையாகும். எனவே, மின்சாரம் பெறுவது ஒருவரின் அடிப்படை உரிமையாகும். இந்த மின்இணைப்பை திரு. RM சுப்பிரமணியன் அவர்கள் அவர் குடியிருந்து வரும் வீட்டில் உபயோகித்து வருவதாலும் மின்கட்டணம் சரியாக செலுத்தப்படுவதாலும் மேலும், மின்இணைப்பை துண்டிக்க வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வின் பத்தி **14.11**ல் கூறப்பட்டுள்ள காரணங்கள் எதுவும் இல்லாத நிலையில் மேற்கண்ட மின்இணைப்பை துண்டிப்பு செய்யவேண்டும் என்ற மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்படையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 14. முடிவுரை

**14.1** வழக்கெழு வினா ஒன்று, இரண்டு, மூன்று மற்றும் நான்கிற்கான தீர்வுகளின்படி மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

14.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.35/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ.தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1) திரு. ரா. முத்துராமலிங்கம்,
த/பெ ராமையா,
கொட்டகுடி,
மேலூர் தாலுகா,
மதுரை மாவட்டம் – 625 106.

செயற் பொறியாளர்/இ&ப,
கிழக்கு/மதுரை,
மதுரை மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
புது நத்தம் ரோடு,
திருப்பாலை – 14.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
மதுரை மின் பகிர்மான வட்டம் ,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர், மதுரை.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.